செ.வெ.எண் : 186 நாள் : 30.08.2025

செய்தி வெளியீடு

**சென்னை மாவட்டத்தில் தொகுப்பூதிய அடிப்படையில் சமூகப் பணியாளர் உடன் இணைந்த ஆற்றுப்படுத்துநர் பணியிடங்களை நிரப்ப வெளிமுகமை நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது – மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப. அவர்கள் தகவல்**

சென்னை மாவட்டத்தில் செயல்படும் அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் அனுமதிக்கப்படும் சிறார்களுக்கு உளவியல் ரீதியான பிரச்சனைகளைக் கையாளுவதற்கு சமூகப் பணியாளர் உடன் இணைந்த ஆற்றுப்படுத்துநர் தொகுப்பூதிய அடிப்படையில் வெளிமுகமை நிறுவனங்கள் மூலம் நியமனம் செய்ய தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம், 1998 (Tamil Nadu Transparancy in Tenders Act, 1998) இன்படி விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

சமூகப் பணியாளர் உடன் இணைந்த ஆற்றுப்படுத்துநர் (Social Worker cum Counselors) பணியிடத்திற்கு உளவியல் (Psychology) / சமூகப்பணி (Social Work) / சமூகவியல் (Sociology) / சமூக அறிவியல் (Social Science) ஆகிய ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டத்துடன் கணினியில் அறிவுத்திறமை பெற்றிருக்க வேண்டும். மேற்காணும் தகுதிகளுடன் சமுகப்பணியில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். 20.08.2025 அன்று 42 வயதிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். இப்பணியிடத்திற்கு மாதம் ரூ.20,000/– தொகுப்பூதியமாக வழங்கப்படும்.

மேற்கண்ட சேவைகள் வழங்கிட தகுதியான வெளிமுகமை நிறுவனங்களிடமிருந்து உரிய சான்றுகளுடன் விண்ணப்பங்களை 08.09.2025 அன்று மாலை 05.30 மணிக்குள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, எண்.13, சாமி பிள்ளைத் தெரு, சூளை, சென்னை–600 112 என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலம் அனுப்பி வைக்க தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தை 63691 14871 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ரஷ்மி சித்தார்த் ஜகடே,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

****

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலம்,**
**சென்னை –01.**